Suruhanjaya Sekuriti
Securities Commission
Malaysia

# நீங்கள் “Fin-fluencing” செய்கிறீர்களா?

## சமூக ஊடகங்களில் முதலீட்டு வாய்ப்பைப் பகிர்வது பற்றி யோசிக்கிறீர்களா?

Suruhanjaya Sekuriti
Securities Commission
Malaysia

1



**மலேசியாவில் மூலதனச் சந்தை தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் விளம்பரம் Securities Commission Malaysia (SC) ஆல் நிர்வகிக்கப்படுகிறதா?**

மலேசியர்களுக்கு மூலதனச் சந்தை தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் (உதாரணத்திற்கு, யூனிட் டிரஸ்ட் நிதி, வர்த்தக தளம், கிரிப்டோகரன்சி) விளம்பரத்தை SC நிர்வகிக்கிறது.

2



**SC இன் அங்கீகாரம் தேவைப்படும் செயலில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள் என்று நினைக்கிறீர்களா?**

உங்கள் “content” பகிர்வு பற்றி கவனமாக சிந்தியுங்கள், ஏனெனில் இது SC யிடமிருந்து உரிமம் அல்லது பதிவீடு தேவைப்படும் ஒரு செயலாக இருக்கலாம். உரிமம் அல்லது பதிவீடு இல்லாமல் இதுபோன்ற செயலில் ஈடுபடுவது சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும், மேலும் உங்களுக்கு RM10 மில்லியன் வரை அபராதம் அல்லது 10 ஆண்டுகள் வரை சிறை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

3



**நீங்கள் விளம்பரப்படுத்தும் மூலதனச் சந்தை தயாரிப்புகள் அல்லது சேவைகள் SC ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினுடையதா ?**

உங்கள் நலன் கருதி அந்நிறுவனத்தைச் சரிபார்க்கவும். அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள் மற்றும் மோசடி செய்பவர்களுக்கு நீங்கள் உதவியாக அல்லது உடந்தையாக இருந்தால், நீங்கள் SC இடமிருந்து சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ளலாம்.



**4**

**உங்கள் பகிரப்பட்ட “content” தெளிவாகவும் நியாயமாகவும் உள்ளதா?**

உங்கள் “content” தெளிவாகவும் நியாயமாகவும் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள், ஏனெனில் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் “content” ஆல் நீங்கள் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும்.



**5**

**கிரிப்டோகரன்சிகளை இடுகையிடுவதற்கும், பகிர்வதற்கும் அல்லது விளம்பரப்படுத்துவதற்கும் SC இன் அங்கீகாரம் தேவைப்படலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?**

கிரிப்டோகரன்சிகளை இடுகையிடுவது, பகிர்வது அல்லது விளம்பரப்படுத்துவதில், கிரிப்டோகரன்ஸிகள் குறித்த முதலீட்டு ஆலோசனையை நீங்கள் வழங்கினால், SC இன் அங்கீகாரம் தேவைப்படலாம்.



**6**

**நல்ல கமிஷன்கள் மற்றும் துணை நிரல்களை வழங்கும் வர்த்தக தளத்தை நீங்கள் விளம்பரப்படுத்துகிறீர்களா?**

மலேசியர்களை குறிவைக்கும் மூலதன சந்தை தயாரிப்பு அல்லது சேவைகளை விளம்பரப்படுத்தும் எந்த வர்த்தக தளத்திற்கும் SC யிடமிருந்து அங்கீகாரம் தேவை. அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களையோ அல்லது மோசடி செய்பவர்களையோ நீங்கள் விளம்பரப்படுத்தினால், சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு உதவிய அல்லது உடந்தையாக இருப்பதற்கு நீங்கள் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும்.

# பொறுப்பான விளம்பரத்திற்கான சரிபார்ப்புப் பட்டியல்:

Suruhanjaya Sekuriti
Securities Commission
Malaysia

**கேள்ளுங்கள்!** **நீங்கள் முதலீட்டு ஆலோசனை வழங்குகிறீர்களா?**

SC வெளியிட்ட "Guidance Note on Provision of Investment Advice" ஐ பார்க்கவும்.

**ஜாக்கிரதை!** **விளம்பரத்திற்காக உங்களை ஈடுபடுத்தும் நிறுவனத்தை நீங்கள் சரிபார்த்துவிட்டீர்களா?**

ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் SC ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க, SC இன் "Investment checker - https://www.sc.com.my/investment-checker ஐ பயன்படுத்துங்கள். உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், 03-62048999 என்ற எண்ணில் அல்லது aduan@seccom.com.my என்ற மின்னஞ்சல் முகவரி வாயிலாக SC ஐ தொடர்பு கொள்ளவும்.

**சரி பாருங்கள்!** **உங்கள் இடுகையிடல், பகிர்தல் அல்லது விளம்பரம் SC வெளியிட்ட விளம்பர வழிகாட்டுதல்களுடன் இணங்குகிறதா?**

உங்கள் இடுகையிடல், பகிர்தல் அல்லது விளம்பரம் SC இன் "Guidelines on Advertising for Capital Market Products and Related Services" உடன் இணங்குவதை உறுதிசெய்யவும்.

**#pausebeforeyoupost**

**#telitibarukongsi**